தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 136 | 4 Pages | 14.12.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 136 | 4 பக்கங்கள் | 14.12.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை உடைமை**
**மயலாகும் மற்றும் பெயர்த்து**

**விளக்கம்:** தவம் செய்தவற்கு ஒரு பற்றும் இல்லாதிருத்தல் இயல்பாகும், பற்று உடையவராகஇருத்தல்மீண்டும்மயங்குவதற்கு வழியாகும்.

# ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்



புதுடெல்லி, டிச.14

'ஒரே நாடு, ஒரே தேர்தல்' திட்டத்துக்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்த முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையிலான உயர் மட்டக் குழு சமர்ப்பித்த அறிக்கையை, மத்திய அமைச்சரவை கடந்த செப்., 18ம் தேதி ஒருமனதாக ஏற்றுக்கொண்டது. 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்த நிலையில், இது தொடர்பான மசோதா, நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட உள்ளதாக தகவல் வெளியாகி இருந்தது.

இதனிடையே நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் கடந்த மாதம் 25ம் தேதி தொடங்கிய நாளில் இருந்து, அதானி லஞ்ச விவகாரத்தை எழுப்பி, தினமும் நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தி வருகின்றன. மேலும் நாடாளுமன்ற கூட்டுக்குழு அமைத்து விசாரணை நடத்த வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றன.

இந்த சூழலில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இன்று மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. தலைநகர் டெல்லியில் உள்ள நாடாளுமன்ற வளாகத்தில் பிற்பகல் 1 மணிக்கு அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்து விவாதிக்க வாய்ப்பு உள்ளதாகவும், அரசின் சில முக்கியத் திட்டங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளிக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில் 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' மசோதாவுக்கு பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதனைத்தொடர்ந்து நடப்பு கூட்டத்தொடரிலே மசோதாவை தாக்கல் செய்ய மத்திய அரசு ஆயத்தமாகி உள்ளது.

நாடு முழுவதும் 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' நடத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளநிலையில், இது நாடாளுமன்றம், மாநில சட்டமன்றங்களுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த வகை செய்யும்.

2029 தேர்தலுக்கு முன் சட்டத்தை அமல்படுத்த திட்டமிட்டுள்ளதாக மத்திய உள்துறை மந்திரி அமித் ஷா ஏற்கனவே கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் போராட்டம்




புதுடெல்லி, டிச.14

சூரிய மின்சார விநியோகம் தொடர்பான முதலீடுகளை பெற இந்திய அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்ததாகவும், சூரிய ஒளி மின் உற்பத்தி முதலீட்டாளர்களை ஏமாற்றி மோசடி செய்ததாகவும் அதானி குழுமம் மீது அமெரிக்காவில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு தொடர்பாக அதானிக்கு நியூயார்க் கோர்ட்டு பிடிவாரண்டு பிறப்பித்தது.

இந்த விவகாரம் பூதாகரமான நிலையில் தன் மீதும் தனது நிறுவனம் மீதும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டுள்ளதாக அதானி தெரிவித்து வருகிறார். இதனிடையே, அதானி விவகாரம் தொடர்பாக நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்த வேண்டுமென எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றன. ஆனால், அந்த கோரிக்கையை மத்திய அரசு ஏற்கவில்லை.

இந்நிலையில், அதானி விவகாரம் தொடர்பாக நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்த உத்தரவிடக்கோரி இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற இந்த போராட்டத்தில் காங்கிரஸ், திமுக மற்றும் இடதுசாரிக் கட்சிகளை சேர்ந்த எம்.பி.க்கள் கலந்துகொண்டனர். போராட்டத்தின்போது, நாட்டை விற்க விடமாடோம் என்ற பாதகைகளை ஏந்தியும், பிரதமர் மோடி, அதானிக்கு எதிராக கோஷங்களை எழுப்பியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# ஜம்முகாஷ்மீர், உ.பி. உள்ளிட்ட 19 இடங்களில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனை

புதுடெல்லி, டிச.14

பாகிஸ்தானை சேர்ந்த ஜெய்ஷ்இமுகமது இயக்கம் இளைஞர்களை தீவிரவாதிகளாக ஆக்கி இந்தியாவில் பயங்கரவாதத்தை பரப்பும் சதித் திட்டத்தின்விசாரணையின்ஒருபகுதியாகதேசியபுலனாய்வுஅமைப்பு (என்.ஐ.ஏ.) அதிகாரிகள் இன்று ஜம்முகாஷ்மீர், உ.பி. உள்ளிட்ட 19 இடங்களில் அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர்.

இந்த சோதனையானது உத்தரபிரதேசம் உள்ளிட்ட 3 மாநிலங்களிலும், ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்திலும் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. ஜம்மு காஷ்மீரில் அனந்த்நாக், பாரமுல்லாவில் மற்றும் புட்காம் மாவட்டங்களில் இன்று அதிகாலை என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

# 'ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டம் ஜனநாயகத்துக்கு எதிரானது: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தாக்கு

சென்னை, டிச.14

'ஒரே நாடு, ஒரே தேர்தல்' திட்டத்துக்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்த முன்னாள்ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையிலான உயர்மட்டக் குழு சமர்ப்பித்த அறிக்கையை, மத்திய அமைச்சரவை கடந்த செப்., 18ம் தேதி ஒருமனதாக ஏற்றுக்கொண்டது. தொடர்ந்து, 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' மசோதாவுக்கு பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை இன்று ஒப்புதல் அளித்துள்ளது. நடப்பு கூட்டத்தொடரிலே மசோதாவை தாக்கல் செய்ய மத்திய அரசு ஆயத்தமாகி உள்ளது.

இந்த நிலையில், ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவுக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்து இருப்பதாவது; "ஒரேநாடு, ஒரே தேர்தல் மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இது நடைமுறைக்கு மாறான ஜனநாயக விரோத நடவடிக்கை. 'ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டம் மாநிலங்களின் குரல்களை அழித்து கூட்டாட்சித்தன்மையை சிதைத்து ஆட்சியை சீர்குலைக்கும். இந்திய ஜனநாயகத்தின் மீதான இந்த தாக்குதலை முழு பலத்துடன் எதிர்ப்போம்." இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

# பொறியியல் கல்லூரிகளில் புதிய நவீன ஆய்வகங்கள்: ரூ.12.38 கோடி நிதி ஒதுக்கீடு



சென்னை, டிச.14

உயர்கல்வித்துறையின் மூலம் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள 11 அரசு பொறியியல் கல்லூரிகளில் புதிய நவீன ஆய்வகங்களை அமைக்க ரூ.12.38 கோடி நிதி ஒதுக்கி தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்து இருப்பதாவது;

" முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினால் உயர்கல்வித்துறையின் வளர்ச்சிக்கு பல்வேறு முத்தான திட்டங்கள் வகுத்து கொடுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில், கடந்த 20242025 ம் ஆண்டின் உயர்கல்வித்துறை மானியக்கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின்படி மாநிலத்தில் உள்ள 11 அரசு பொறியியல் கல்லூரிகளில் புதிய நவீன ஆய்வகங்களை அமைக்க தற்போது முதல்அமைச்சர்நிதிஒதுக்கீடுவழங்கியுள்ளார்.

மாணாக்கர்கள், பொருட்களின் இணைய பயன்பாடுகள் மற்றும் பிற மேம்பட்ட உட்பொதிக்கப்பட்ட அமைப்பு அடிப்படையிலான திட்டத்தை உருவாக்க காரைக்குடி மற்றும் போடிநாயக்கனூர் ஆகிய இடங்களில் உள்ள 2 அரசு பொறியியல் கல்லூரிகளில் பொருட்களின் இணைய ஆய்வகம் (Internet of Things Laboratory) அமைக்க தலா ரூ.92,10,000 வீதம் மொத்தம் ரூ.1,84,20,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேலூர், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள 3 அரசு பொறியியல் கல்லூரிகளில் பொருள்சேர் உற்பத்தி ஆய்வகம் அமைக்க தலா ரூ.1,16,00,000 வீதம், மொத்தம் ரூ.3,48,00,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கோயம்புத்தூர், சேலம் மற்றும் பர்கூர் ஆகிய இடங்களில் உள்ள 3 அரசு பொறியியல் கல்லூரிகளில் செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திரனியல் ஆய்வகம் அமைக்க தலா ரூ.1,31,87,975 வீதம் மொத்தம் ரூ.3,95,63,926 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வகம், மாணாக்கர்களுக்கு பலவித மானபயிற்சிதிட்டங்கள்,பட்டறைகள் (Workshops) மற்றும் படிப்புகளை வழங்கும். மின்சார வாகன வடிவமைப்பு மற்றும் மேம்பாடு, மோட்டார் மற்றும் மோட்டார் கட்டுப்பாடு, மின்சார வாகன மின்கலன்கள் மற்றும் மின்கல மேலாண்மை அமைப்புகள், மின்னேற்றி, உட்பொதிக்கப்பட்ட அமைப்புகள், பொருட்களின் இணையம் மற்றும் தானியங்கி வாகன மின்னணுவியல் ஆகியவற்றில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை துரிதப்படுத்த, திருநெல்வேலி, தருமபுரி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள 3 அரசு பொறியியல் கல்லூரிகளில் மின்சார வாகன தொழில்நுட்ப ஆய்வகம் அமைக்க தலா ரூ.1,03,33,910 வீதம், மொத்தம் ரூ.3,10,01,730 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,

இதன்மூலம் தமிழ்நாட்டில் உள்ள 11 அரசு பொறியியல் கல்லூரிகளில் அப்பகுதியில் உள்ள மாணவர்களின் தேவையினை பூர்த்தி செய்ய இந்த புதிய நவீன ஆய்வகங்கள் அமையும் என்பதில் ஐயமில்லை. இவற்றை அமைக்க மொத்தம் ரூ.12.38 கோடி நிதி ஒதுக்கி தமிழ்நாடு அரசு அரசாணைகள் வெளியிட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மாசாணியம்மன் கோவில் கும்பாபிஷேகம் அமைச்சர்கள் சேகர்பாபு, செந்தில்பாலாஜி பங்கேற்பு



பொள்ளாச்சி, டிச.14

கோவை மாவட்டம் ஆனைமலையில் பிரசித்தி பெற்ற மாசாணியம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் அம்மன் சயனகோலத்தில் காட்சி அளிப்பதால் இங்கு வைக்கும் வேண்டுதல்கள் நிறைவேறுவதாக பக்தர்கள் நம்புகிறார்கள்.

இந்த கோவிலில் அமாவாசை நாளில் நடைபெறும் பூஜை விசேஷமானது. இதனால் மாதந்தோறும் அமாவாசை தினத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்து அம்மனை வழிபடுவார்கள். மேலும் சனி, ஞாயிறு விடுமுறை நாட்களிலும், விசேஷ நாட்களிலும் கோவிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதும்.

இத்தகைய சிறப்புமிக்க மாசாணியம்மன் கோவிலில் கடைசியாக கடந்த 2010 டிசம்பர் 12ந் தேதி கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. கும்பாபிஷேகம் முடிந்து 14 ஆண்டுகள் ஆனதைத்தொடர்ந்து மீண்டும் கும்பாபிஷேகம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

அதன்படி கோவிலில் கடந்த சில மாதங்களாக திருப்பணிகள் நடந்தன. திருப்பணிகள் நிறைவு பெற்றதையடுத்து கடந்த 6ந் தேதி விக்னேஷ்வர பூஜையும் கும்பாபிஷேக விழா தொடங்கியது.

தொடர்ந்து பிரமாண்டமாக அமைக்கப்பட்ட யாகசாலை மண்டபத்தில் யாக பூஜைகளும் தொடங்கி நடந்து வந்தது. கோபுரம் மற்றும் விமானங்களில் பொருத்துவதற்காக 52 புதிய கும்பங்கள் தயார் செய்யப்பட்டு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு பூஜைகள் நடந்தன.

விழாவின் சிகர நிகழ்ச்சியாக கும்பாபிஷேகம் இன்று காலை நடந்தது. காலை 7.35 மணிக்கு 6ம் கால யாக பூஜையும், 8.45 மணிக்கு பூர்ணாகுதி பூஜையும் நடந்தது. தொடர்ந்து 9.15 மணிக்கு மாசாணியம்மன் கோவில் விமானம், ராஜகோபுரம் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

விமானம் மற்றும் ராஜகோபுரங்களுக்கு கோவில் அர்ச்சகர்கள் புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தனர்.

கும்பாபிஷேகத்தை காண லட்சக்கணக்கான பக்தர்கள் திரண்டு இருந்தனர். கும்பாபிஷேகம் நடந்தபோது அம்மா தாயே மாசாணி என பக்தி கோஷம் எழுப்பி வழிபட்டனர். பக்தர்கள் மீது டிரோன்கள் மூலம் புனித நீர் தெளிக்கப்பட்டது. கும்பாபிஷேகத்தின் போது மழை தூறிக்கொண்டே இருந்தது. ஆனால் பக்தர்கள் அதனை பொருட்படுத்தாமல் கும்பாபிஷேகத்தை கண்டு ரசித்தனர். கும்பாபிஷேக நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, மின்சாரத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி, முன்னாள் துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன் எம்.எல்.ஏ., கோவை மாவட்ட கலெக்டர் கிராந்திகுமார்பாடி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் மருமகன் சபரீசன் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கும்பாபிஷேகத்தை காண இன்று அதிகாலை முதலே பக்தர்கள் கோவிலில் குவியத் தொடங்கினர். அவர்களுக்கு தேவையான குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு இருந்தன. கோவை, பொள்ளாச்சி, உடுமலை பகுதியில் இருந்து ஆனைமலைக்கு சிறப்பு பஸ்களும் இயக்கப்பட்டன.

பலத்த போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது. 1100 போலீசார், 500 ஊர்க்காவல் படையினர் பாதுகாப்பில் ஈடுபட்டு கண்காணித்தனர். மருத்துவக்குழுவினர், தீயணைப்புத்துறையினர் தயார் நிலையில் இருந்தனர். ஆனைமலையில் இன்று போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டிருந்தது. பக்தர்கள் வசதிக்காக 14 இடங்களில் வாகன நிறுத்துமிடங்கள் ஏற்படுத்தப்பட்டு இருந்தது.

# உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்ற குகேஷுக்கு டி.டி.வி. தினகரன் வாழ்த்து



சென்னை, டிச.14

சிங்கப்பூரில் நடைபெற்ற உலக செஸ் சாம்பியன்ஷிப் தொடரின் இறுதி சுற்றில், நடப்பு சாம்பியனான சீனாவின் டிங் லிரெனை வீழ்த்தி தமிழக வீரர் குகேஷ் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார். இதன் மூலம் 18 வயதிலேயே உலக செஸ் சாம்பியனாகி குகேஷ் வரலாறு படைத்துள்ளார். அவருக்கு பல்வேறு தரப்பில் இருந்தும் வாழ்த்துகள் குவிந்து வருகின்றன

இந்த நிலையில், குகேஷுக்கு அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் ,

சிங்கப்பூரில் நடைபெற்ற உலக செஸ் சாம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டியில் வென்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றி இருக்கும் தமிழகத்தைச் சேர்ந்த இளம் வீரர் குகேஷ் அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். கடின பயிற்சி, விடாமுயற்சி, தளராத தன்னம்பிக்கை ஆகிய மூன்றையே மூலதனமாக கொண்டு உலக சாம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்திருக்கும் தமிழக வீரர் குகேஷ் அவர்களின் சாதனைப் பயணம் மென்மேலும் தொடர வாழ்த்தி மகிழ்கிறேன்.என தெரிவித்துள்ளார் .

# ஈஷாவின் வழிகாட்டுதலில் இயங்கும் விவசாயிகள் உற்பத்தியாளர் அமைப்புக்கு தேசிய விருது




கோவை, டிச.14

இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) சார்பில் டெல்லியில் கடந்த 10ஆம் தேதி நடைபெற்ற தேசிய அளவிலான விருது வழங்கும் விழாவில், கர்நாடகாவின் குடகு பகுதியில் இயங்கி வரும் 'பொன்னாடு உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு' சந்தைகள் இணைப்பு பிரிவில் 'FPO எக்ஸலன்ஸ் விருது' வழங்கப்பட்டது.

அதே போல கோவை மாவட்டம் தென்சேரி மலை உழவர் உற்பத்தியாளர்நிறுவனத்திற்குநபார்டு வங்கியின் 2023 24ம் நிதியாண்டிற்கான சிறந்த FPO விருது வழங்கப்பட்டது. தமிழ்நாட்டில் நபார்டு வங்கியின் ஆதரவில் சிறப்பாக செயல்படும் FPO க்களில் ஒன்றாக இந்நிறுவனம் அங்கிகரிக்கப்பட்டு இவ்விருது வழங்கப்பட்டது.

சென்னையில் நடைபெற்ற நபார்டு வங்கியின் 43வது ஆண்டு விழாவில் கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் இந்த விருதினை வழங்கினார்.

இந்நிறுவனம் தென்னையை முதன்மை பயிராக கொண்டு, 750 விவசாயிகளோடு கோவை சுல்தான்பேட்டை பகுதியில் தொடங்கப்பட்டது.

மேலும் கர்நாடகா தும்கூரில் இயங்கி வரும் 'திப்தூர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு' சிறந்த தரத்திலான உற்பத்தி மற்றும் வாடிக்கையாளர்களுக்கு நல்ல முறையில் பொருள்களை பேக் செய்து வழங்கி வருதற்கான விருதினை கர்நாடக மாநிலத்தின் 'வேளாண் உற்பத்தி பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி கழகம்( KAPPEC)' கடந்த நவம்பர் 8ஆம் தேதி வழங்கி கவுரவித்தது.

வேளாண் செய்திகளை பிரத்யேகமாக வெளியிடும் 'க்ரிஷி ஜாக்ரன்' பத்திரிக்கையும், இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலும் (ICAR) இணைந்து நீலகிரி கூடலூர் பகுதியில் இயங்கி வரும் 'மலநாடு உழவன் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு' Millionaire Farmer of India (MFOI) என்கிற விருதினை வழங்கியுள்ளது.

மேலும் இதே MFOI விருது கோவை தொண்டாமுத்தூர் பகுதியில் இயங்கி வரும் 'வெள்ளியங்கிரி உழவன் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும்' வழங்கப்பட்டது.

ஈஷாவின் வழிகாட்டுதலில் இயங்கும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPO) சிறு மற்றும் குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து, விவசாய விளைபொருட்களை சந்தைப்படுத்துதல், இடுபொருள் விலையை குறைத்தல், மதிப்பு கூட்டுதல், விலை நிர்ணயிக்கும் ஆற்றலை மேம்படுத்துதல் உள்ளிட்ட வழிகாட்டுதல்களை வழங்கி நீடித்த உயர் வருமானம் மற்றும் நிகர லாபத்தை விவசாயிகள் பெற உதவுகிறது.

மேலும் ஈஷாவின் FPO க்களில் உறுப்பினர்களாக இருக்கும் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக இலவச அதிநவீன மண் பரிசோதனை ஆய்வகம் கோவையில் செயல்பட்டு வருகிறது. விவசாயிகள் மத்தியில் அதிக அளவிலான உர பயன்பாட்டை குறைத்து, மண்ணிற்கு தேவையான உரத்தினை மட்டும் சரியாக தேர்வு செய்து பயன்படுத்தும் நோக்கிலும், படிப்படியாக மண் வளத்தை கூட்டி இயற்கை விவசாயத்தை நோக்கி அவர்களை நகர்த்த உதவும் வகையில் இந்த ஆய்வகம் செயல்பட்டு வருகிறது.

# 'விஜய்' கட்சி சார்பில் ஏழைப் பெண்ணுக்கு 'டீக்கடை' புஸ்சி ஆனந்த் திறந்து வைத்தார்




சென்னை, டிச.14

சென்னை முடிச்சூரை சேர்ந்த லட்சுமி என்ற பெண் பனையூரில் அலுவலக உள்ள தமிழக வெற்றிக் கழகத்துக்கு நேரில் வந்து தனது வாழ்வாதாரத்திற்கு உதவும் படி கட்சி பொதுச் செயலாளர் புஸ்சி என் . ஆ னந் தி ட ம் கோரிக்கை அளித்தார். லட்சுமி கோரிக்கையை கட்சி தலைவர் விஜய் கவனத்துக்கு பொதுச் செயலாளர் ஆனந்த் கொண்டு சென்றார். இதையடுத்து கட்சி சார்பில் அவருக்கு உதவும்படி விஜய் உத்தரவிட்டார்.

விஜய் உத்தரவுக்கிணங்க ஏழைப் பெண்ணான லட்சுமிக்கு முடிச்சூர் பகுதி நிர்வாகிகள் தயா, ரிஸ்வான், புஷ்பராஜ் ஆகியோர் ஏற்பாட்டில் புதிய 'தேநீர் விடுதி' அமைத்து கொடுத்தனர். புதிய கடையை பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் இ.சி.ஆர். சரவணன் உள்பட செங்கல்பட்டு நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து வேங்கட மங்கலம் ஊராட்சி ரத்தின மங்கலத்தில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு 52 பிளாஸ்டிக் சேர்கள், 10 பாய், 3 குக்கர், 50 சில்வர் தட்டு, 30 லஞ்ச் பேக், 2 குப்பை கூடை, 2 வாளி, 2 தண்ணீர் கேன், குழந்தைகளுக்கு பிஸ்கட், இனிப்பு போன்ற பொருட்களை கட்சி சார்பில் பொதுச் செயலாளர் ஆனந்த் வழங்கினார்.

திருப்போரூர் ஒன்றிய த.வெ.க. சார்பில் நிர்வாகிகள் வி.கே.ஆர்.எஸ். தியாகு, தீனா ஆகியோர் ஏற்பாட்டில் மேலைக் கோட்டூரில் அமைந்துள்ள மேகநாதன் கோவிலில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு 150 பெண்களுக்கு புடவை, சர்க்கரை பொங்கல் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

கடலூர் மாவட்ட தமிழக வெற்றிக் கழகம் சார்பில் புருஷோத்தமன் நகரில் ஃபெஞ்ஜல் புயலால் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கு பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் கடலூர் மாவட்ட நிர்வாகிகள் ராஜசேகர், ராஜ்குமார் ஏற்பாட்டில் அரிசி, காய்கறிகள், போர்வை ஆகிய பொருட்களை வீடு வீடாக சென்று நிவாரண பொருட்கள் வழங்கினார்.

# மின்மினி செயலி மற்றும் போத்தீஸ் இணைந்து நடத்தும் `உலக சேலை தின' சிறப்பு போட்டி

சென்னை, டிச.13

மின்மினி செயலி மற்றும் போத்தீஸ் இணைந்து உலக சேலை தின சிறப்பு போட்டியை நடத்துகிறது.

நம்பண்பாட்டின்அடையாளமாகவும், பெண்களின் வாழ்வின் அங்கமாகவும் விளங்குவது சேலை. ஆடை வகை என்பதையும் தாண்டி நேர்த்தியான உழைப்புக்கும், கலை நயத்திற்கும் எடுத்துக்காட்டாக இருப்பது சேலை.

அ ப் ப டி ப் ப ட் ட பெருமை வாய்ந்த உடையாகிய சேலையை கவுரவிக்கும் விதமாக வருகிற 21ந்தேதி 'உலக சேலை தினம்' கொண்டாடப்பட இருக்கிறது.

இந்த சேலை தினத்தை முன்னிட்டு ஆடை ரகங்களின் தன்னிகரற்ற அடையாளமான போத்தீஸ் மற்றும் மின்மினி செயலி இணைந்து பெண்கள் மட்டும் கலந்துகொள்ளும் போத்தீஸ் சேலை தினச் சிறப்பு 'ஹேஷ்டேக்' போட்டியை அறிவித்து உள்ளார்கள்.

இந்த போட்டியில் 18 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் அனைவரும் க லந் து கொ ள் ள லா ம் . போட்டியில் பங்கேற்க விருப்பும் பெண்கள் சேலை அணிந்துகொண்டு அதைபுகைப்படமாகவோ அல்லது சுவாரசியமான ரீல்ஸ்களாவோ எடுத்து அதை அவர்களது சொந்த இன்ஸ்டாகிராம் சமூக வலைதள பக்கத்தில் பதிவிட வேண்டும்.

அப்படி பதிவிடும் போது தவறாமல் ஹேஷ்டேக் போத்தீஸ் சேலை தினம் அதாவது #PothysSareeDay என்பதை இணைத்துபதிவிடவேண்டும். மேலும் அவர்களது புகைப்படம் மற்றும் ரீல்ஸ்களை பதிவிடும் போது மறக்காமல் போத்தீஸ் மற்றும் மின்மினி செயலியின் அதிகாரப்பூர்வ இன்ஸ்டாகிராம் பக்கத்தை 'டேக்' செய்ய வேண்டும்.

போட்டியில் கலந்து கொள்ள நினைக்கும் பெண்கள் வருகிற 17ந்தேதிக்குள் தங்களது பதிவுகளை மேலே குறிப்பிட்ட விதத்தில் தங்கள் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட வேண்டும்.

நம் பண்பாட்டின் மேன்மையை வெளிப்படுத்தும் சேலையைக் கொண்டாடும் விதமாக போத்தீஸ் மற்றும் மின்மினி செயலி இணைந்து நடத்தும் இந்தப் போட்டியில் கலந்துகொண்டு அட்டகாசமான போட்டோ மற்றும் சுவாரசியமான ரீல்ஸ்களை பதிவிடும் பெண் போட்டியாளர்களின்சிறப்பான பதிவுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வெற்றியா ள ர் க ளு க் கு ஆச்சரியமூட்டும் பரிசுகள் வழங்கப்படும்.

வெ ற் றி யா ள ர் க ளின் தேர்வு நடுவர் குழு மற்றும் நி ர் வ ா க த் தின் நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டதாகும். மேலும் விவரங்களுக்கு 85915 85915 என்ற செல்போன் எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

# கல்பாக்கம் அருகே கரை ஒதுங்கிய விநோத படகு அதிகாரிகள் விசாரணை



செங்கல்பட்டு, டிச.14

செங்கல்பட்டு மாவட்டம், கல்பாக்கம் அடுத்த புதுப்பட்டினம் கடலில் மரத்திலான படகு ஒன்று மிதந்து கரை அருகே வந்தது.

இதைபார்த்தமீனவர்கள் படகை கரைக்கு இழுத்து வந்தனர். தகவலறிந்த கல்பாக்கம் போலீசார் மற்றும் மீன்வளத்துறை அதிகாரிகள் படகை ஆய்வு செய்தனர்.

படகில் புத்தர் படங்கள், புத்தமத வழிபாட்டு முத்திரைகள், பொறிக்கப்பட்டு இருந்ததால் சீனா, மாலத்தீவு அல்லது பர்மா பகுதிகளில் உள்ளதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டது.

மேலும், கடல் சீற்றம் காரணமாக இங்கு காற்று இழுத்து வந்திருக்கலாம் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். விநோதமான இந்த படகை அப்பகுதி மக்கள் கூட்டமாக ஆர்வத்துடன் பார்த்து வருகின்றனர். இதனால், அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# மழை எதிரொலி: சதுரகிரி செல்ல பக்தர்களுக்கு தடை




வத்திராயிருப்பு, டிச.14

வத்திராயிருப்பு அருகே மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோவில் அமைந்துள்ளது.

மாதம் தோறும் பிரதோஷம், அமாவாசை, பவுர்ணமி உள்ளிட்ட விசேஷ நாட்கள் மட்டுமே பக்தர்கள் இந்த கோவிலுக்கு செல்ல பல்வேறு கட்டுப்பாடுகளுடன் வனத்துறை சார்பில் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

சதுரகிரி கோவிலில் கார்த்திகை மாத பிரதோஷம் மற்றும் பவுர்ணமி வழிபாட்டுக்காக நாளை முதல் 16ந் தேதி வரை 4 நாட்கள் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய வனத்துறையினர் அனுமதி அளித்திருந்தனர்.

இதனிடையே தமிழகம் முழுவதும் தற்போது பரவலாக மிதமான மழை முதல் கனமழை வரை பெய்து வருகிறது.

இந்த நிலையில் தற்போது கனமழை காரணமாக பாதுகாப்பு கருதி பக்தர்கள் சதுரகிரி மலை கோவிலுக்கு செல்ல தடை விதித்து வனத்துறை உத்தரவிட்டுள்ளது. இதனால் பக்தர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

# திருப்பூர்: பஞ்சலிங்க அருவியில் குளிக்க தடை



திருப்பூர், டிச.14

தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை யொட்டிய கிழக்கு இந்திய பெருங்கடலில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி நிலவுகிறது. இதனால் தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் மழை பெய்து வருகிறது.

திருப்பூரில் கடந்த ஒரு வாரமாக வெயில் அடித்து வந்ததுடன், அவ்வப்போது வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

இந்தநிலையில் இன்று காலை திருப்பூர் மாநகர் மற்றும் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் பரவலாக மழை பெய்தது.

காலை 6 மணியளவில் லேசானதூரலுடன்பெய்ய தொடங்கிய மழை நேரம் செல்ல செல்ல பலத்த மழையாக பெய்தது. இதனால் காலையில் பள்ளி, கல்லூரிகளுக்கு செல்லும் மாணவ, மாணவிகள், வேலைக்கு செல்பவர்கள் சிரமத்திற்கு உள்ளாகினர். பலர் மழையில் நனைந்தபடி யு ம் , குடைபிடித்தபடியும் தாங்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு சென்றனர். வாகன ஓட்டிகள் மழையில் நனைந்தபடி சென்றனர்.

இந்த மழையின் காரணமாக தாழ்வான பகுதியில் தண்ணீர் குளம் போல் தேங்கியது. சிதலமடைந்த சாலைகள் சேறும் சகதியுமாக மாறின.

மாவட்டத்திற்குட்பட்ட தாராபுரம், பல்லடம், அவினாசி, உடுமலை உள்பட அனைத்து பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது. ஏற்கனவே மாவட்டம் முழுவதும் பனியின் தாக்கம் அதிகம் உள்ள நிலையில், இன்று காலை பெய்த மழையால் குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை நிலவியது.

உடுமலை மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்து வரும் மழையின் காரணமாக திருமூர்த்தி மலை பஞ்சலிங்கஅருவியில்நீர்வரத்து அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அங்கு சுற்றுலா பயணிகள் குளிக்க தடை வி தி க் க ப் ப ட் டு ள் ள து . அ டி வ ா ர ப் ப கு தி யி ல் உள்ள அமணலிங்கேஸ்வரர் கோவிலில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

# மடிப்பாக்கம் ஏரியை மீட்டெடுக்க சென்னை மாநகராட்சி திட்டம்

சென்னை, டிச.14

தென்சென்னை பகுதியில் உள்ள முக்கிய ஏரிகளில் ஒன்றான மடிப்பாக்கம் ஏரி 62 ஏக்கர்பரப்பளவு கொண்டது. இந்த ஏரி கடந்த 2017ம் ஆண்டு ஆக்கிரமிப்பின் பிடியில் இருந்தது.

மேலும் ஏரியில் குப்பைகள் கொட்டப்பட்டதால் ஏரியின் பரப்பளவும் குறைந்தது. இதையடுத்து பல்வேறு அமைப்புகளின் முயற்சியால் இந்த ஏரி மீட்டெடுக்கப்பட்டது.

இதையடுத்து மடிப்பாக்கம் ஏரியின் புனரமைப்பு பணிகளை கடந்த 2018ம் ஆண்டு சென்னை மாநகராட்சி தொடங்கியது. ரூ.2 கோடி மதிப்பில் நடைபாதைகள், பெண்கள் உடற்பயிற்சி கூடம், திறந்தவெளி உடற்பயிற்சி கூடம், விளக்குகள் ஆகியவை அமைக்கப்பட்டன.

மேலும் சட்டமன்ற உறுப்பினர் நிதி ரூ.42 லட்சத்தில் வேலியுடன் கூடிய பாதை அமைக்கப்பட்டது. ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ரூ.1.5 கோடி மதிப்பில் 2 கி.மீ நீளத்துக்கு ஏரியை ஆழப்படுத்தி, அகலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஏரி மடிப்பாக்கம் அய்யப்பன் நகர், கார்த்தி கேயபுரம், ராம் நகர், சதாசிவம் நகர், ராஜாஜி நகர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் 1 லட்சம் மக்களின் வாழ்வாதாரமாக உள்ளது. இதையடுத்து பொதுமக்கள் ஏரியின் கரையோரங்களில் 1,000 மரக்கன்றுகளை நட்டனர். இந்த நிலையில் தற்போது பிளாஸ்டிக் கழிவுப்பொருட்களை வீசி எறிவதாலும், களை செடிகள் அதிக அளவில் வளர்ந்திருப்பதாலும் மடிப்பாக்கம் ஏரி மீண்டும் மாசடைந்து வருகிறது.

இதுகுறித்து அந்த பகுதியை சேர்ந்த சமூக ஆர்வலர்கள்கூறுகையில், 'மடிப்பாக்கம் பகுதியில் ஏற்படும் வெள்ளப்பெருக்கை தடுக்க மடிப்பாக்கம் ஏரி மட்டுமே முக்கிய ஆதாரமாக உள்ளது. இந்த ஏரியை பாதுகாக்க சென்னை மாநகராட்சி பல வசதிகளைசெய்துகொடுத்தாலும், ஏரியை பராமரிக்க பாதுகாவலர்களும், தோட்டக்காரர்களும் இல்லை. எனவே சென்னை மாநகராட்சி மடிப்பாக்கம் ஏரியை பாதுகாத்து, சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளவேண்டும்' என்று கூறியுள்ளனர்.

இதையடுத்து வெள்ள தடுப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக மடிப்பாக்கம் ஏரியை மீட்டெடுக்க சென்னை மாநகராட்சி தி ட் ட மி ட் டு ள் ள து . மேலும் ஏரியை சீரமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்கவும் சென்னை மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

# ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்திரியில் நோயாளிகளிடம் வசூலித்த பணத்தை கையாடல் செய்த 2 ஊழியர்கள்




சென்னை, டிச.14

சென்னை ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்திரியில் தினமும் 10 ஆயிரத்துக்கும் மேல் புறநோயாளிகளும் 5 ஆயிரம் உள் நோயாளிகளும்தங்கிசிகிச்சைபெற்று வருகிறார்கள்.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் அண்டை மாநிலங்களில் இருந்தும் சிகிச்சை பெறுவதற்காக வருகிறார்கள்.

சிக்கலான தீராத நோய் பிரச்சனைகளுக்குஅனைத்தும் மருத்துவ பரிசோதனையும், சிகிச்சையும் சிறப்பாக கிடைப்பதால் அறை எடுத்து தங்கி சிகிச்சை பெறுகிறார்கள். பிற மாநில நோயாளிகளுக்கு கட்டணத்தின் அடிப்படையில் சிகிச்சை அ ளி க் க ப் ப டு கி ற து . இன்ஸ்சூரன்ஸ் திட்டம் அவர்களுக்கு வழங்குவதில் சிக்கல் இருப்பதால் குறைந்த கட்டணத்தில் சிகிச்சை பெறும் நிலை உள்ளது. இந்த நிலையில் ராஜீவ் காந்தி அரசு ஆஸ்பத்திரியில் நோயாளிகளை சேர்க்கும் பிரிவில் முறைகேடு நடந்துள்ளது. பல வருடங்களாக ஆவணகிளார்க்காக பணியாற்றி வரும் பெருங்குளத்தை சேர்ந்த குபேரன்(50), ஆவடியை சேர்ந்த கலைமகன் (42) ஆகிய இருவரும் சேர்ந்து ஆஸ்பத்திரி பதிவேட்டில் போலி கணக்கு எழுதி பணம் கையாடல் செய்திருப்பது தெரியவந்தது. கடந்த மே மாதம் வட மாநிலத்தை சேர்ந்தவர்கள் சிகிச்சை முடித்து வீட்டிற்கு போகும் முன்பு அட்மிஷன் கவுண்டரில் பணம் செலுத்தி உள்ளனர். அந்த பணத்தை இருவரும் கையாடல் செய்து விட்டு போலி ஆவணங்கள் தயாரித்து வைத்துள்ளனர்.

மேலும் இருவரும் சேர்ந்து ரூ.20 ஆயிரத்துக்கும் மேல் பணத்தை கையாடல் செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதுகுறித்து டீன் தேரணிராஜன் ஆஸ்பத்திரி புறக்காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் பேரில் விசாரணை நடத்தி குபேரன், கலைமகன் ஆகிய இருவரையும் போலீசார் கைது செய்தனர்.

அரசு ஆஸ்பத்திரியில் நிர்வாக அலுவலகத்தில் பணம் கையாடல் செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. மேலும் புறநோயாளிகள் அட்மிஷன் விவரங்கள் முழுவதும் ஆய்வு செய்யப்படுகின்றன.

வெளி மாநிலத்தவர்கள் எத்தனை பேர் சிகிச்சை பெற்றர்கள். அவர்களிடம் பெறப்பட்ட பணத்தை ஆஸ்பத்திரி கணக்கில் செலுத்தாமல் மூடி மறைத்தது எப்படி? இதற்கு வேறு யாரும் உடந்தையாக இருந்தார்களா? எனவும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வயல்வெளியில் பாய்ந்து அரசு பஸ் கவிழ்ந்தது



பொன்னேரி, டிச.14

பொன்னேரியில் இருந்து கும்மிடிப்பூண்டி வழியாக சாணாபுத்தூர் செல்லும் அரசு பஸ்(எண் டி62) இன்று காலை புறப்பட்டது. பஸ்சை டிரைவர் வீரய்யன் ஓட்டினார். காலையில் மழை பெய்து கொண்டு இருந்ததால் 2 பயணிகள் மட்டும் பஸ்சில் இருந்தனர்.

பொன்னேரி அடுத்த காட்டாவூர் அருகே சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த மோட்டார் சைக்கிளுக்கு வழிவிடுவதற்காக டிரைவர் பஸ்சை திருப்பினார். அப்போது கட்டுப்பாட்டை இழந்த அரசு பஸ் சாலையோ வயலில் பாய்ந்து கவிழநந்தது.

இதில் ஒரு பயணிக்கு மட்டும் லேசான காயம் ஏற்பட்டது. டிரைவர், கண்டக்டர் அதிர்ஷ்டவசமாக காயமின்றி தப்பினர்.

# முழு கொள்ளளவை எட்டும் உடுமலை அமராவதி அணை

உடுமலை, டிச.14

திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே அமைந்துள்ள அமராவதி அணை 90 அடி உயரம் கொண்டது. இந்த அணையின் மூலம் திருப்பூர், கரூர் மாவட்டங்களை சேர்ந்த 55 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

இதேபோல் கல்லாபுரம், ராம்குளம், வாய்க்கால்கள் மூலமாக சுமார் 2 ஆயிரம் ஏக்கர் விளை நிலம் நேரடி பாசன வசதி பெற்று வருகிறது. தென்மேற்கு பருவமழை காலமான ஜூன் முதல் செப்டம்பர் வரையும், வடகிழக்கு பருவமழை



காலமான அக்டோபர் முதல் டிசம்பர் வரையும் அமராவதி அணைக்கு நீர் வரத்து இருக்கும்.

இதன்மூலம் அமராவதி ஆற்றின் வழியோர கிராமங்களில் வசிக்கின்ற பொதுமக்களின் குடிநீர் தேவை மற்றும் கால்நடைகளுக்கு தேவையான குடிநீர் வசதி நிறைவேற்றப்பட்டு வருகிறது. மேலும் நூற்றுக்கணக்கான கிராம பகுதிகளில் கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த அணையில் 4.04 டி.எம்.சி. தண்ணீரை தேக்கி வைக்க முடியும்.

இன்று காலை அணையின் நீர்மட்டம் 87.60 அடியாக உள்ள நிலையில், அப்பகுதியில் பெய்து வரும் மழையின் காரணமாக அணைக்கு 372 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. இதனால் அணை முழு கொள்ளளவை எட்டும் நிலை உள்ளது. இதன் காரணமாக அணையில் இருந்து ஆற்றில் உபரிநீர் திறந்து விட பொதுப்பணித்துறை அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். தற்போது அணையில் இருந்து 953 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

# குடியிருப்பு பகுதிகளில் இரவு நேரங்களில் உலா வரும் காட்டுப்பன்றிகள் பொதுமக்கள் அச்சம்

அரூர், டிச.14

தருமபுரி மாவட்டம், அரூர் நகர பகுதியிலான திருவிக நகர், கோவிந்த சாமி நகர் ஆகிய குடியிருப்பு பகுதியை ஒட்டி வனப்பகுதி உள்ளது.

இந்தநிலையில் கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் காட்டுப்பன்றிகள் குடியிருப்பு பகுதிகளுக்குள் புகுந்து சாலைகளில் குட்டிகளுடன் உலா வந்த வண்ணம் உள்ளன.



அதனை தொடர்ந்து நேற்று இரவும் திருவிக நகர், கோவிந்தசாமி நகர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சாலைகளில் காட்டு பன்றி ஒன்று தனது குட்டியுடன் உலா வந்தது.

அப்போது அவ்வழியாக சென்ற வாகன ஓட்டிகள் மிகுந்த அச்சத்துடன் வாகனத்தை இயக்கி சென்றனர். எனவே ஊருக்குள் வனவிலங்குகள் வராமல் இருக்க வனத்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கிருஷ்ணகிரி அருகே நடமாடும் சிறுத்தையை பிடிக்கும் பணியில் வனத்துறையினர் தீவிரம்

கிருஷ்ணகிரி, டிச.14

கிருஷ்ணகிரி அருகே உள்ளது ஜாகீர் வெங்கடாபுரம். இதன் அருகில் உள்ள குல்நகர், அதியமான்நகர், பாஞ்சாலியூர், கொண்டே பள்ளி, பையனப்பள்ளி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் சிறுத்தை நடமாட்டம் உள்ளதாக தகவல் வெளியானது.

இதை யடுத்து கிருஷ்ணகிரி வனச்சரகர் முனியப்பன், வனவர் சிவக்குமார் ஆகியோர் கொண்ட குழுவினர், அப்பகுதியில் ஆய்வு செய்தனர். அப்போது, அதியமான் நகரில் உள்ள வெற்றிச்செல்வன் என்பவரது வீட்டில் இருந்த சி.சி.டி.வி. கேமராக்களை ஆய்வு செய்த போது சிறுத்தை ஒன்று சுற்றி திரிவது பதிவாகி இருந்தது.

இதைத் தொடர்ந்து அந்த பகுதியில் வனத்துறையினர் ஆய்வு செய்து சிறுத்தையின் காலடி தடத்தை பதிவு கண்டுபிடித்தனர். இதுகுறித்து வனச்சரக அலுவலர் முனியப்பன் கூறியதாவது:

கடந்த 9ந் தேதி இரவு அதியமான் நகர் பகுதியில் சிறுத்தை நடமாட்டம் உள்ளதாக அப்பகுதி மக்கள் தகவல் தெரிவித்தனர். இரவு முழுவதும் பட்டாசுக்கள் வெடித்தும், சத்தம் எழுப்பியவாறு சிறுத்தை தேடும் பணி நடந்தது. காலையில் சிறுத்தையின் காலடித்தடம் உறுதி செய்யப்பட்டது. கடந்த 2 நாட்களாக சிறுத்தை யாரும் கண்ணிலும் தென்படவில்லை. அங்குள்ள சி.சி. டி.வி. கேமராக்களிலும் பதிவாகவில்லை. பட்டாசு வெடித்தால், அங்கிருந்து இடம் பெயர்ந்து இ ரு க் க ல ா ம் . முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அப்பகுதியில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறோம். பொதுமக்கள் யாரும் அச்சப்பட வேண்டாம். விழிப்புடன் இருந்து, சிறுத்தை நடமாட்டம் கண்டறிந்தால் உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். இதைத்தொடர்ந்து சிறுத்தையை பிடிப்பதற்காக கிருஷ்ணகிரி முழுவதும் தேடும் பணியில் வனத்துறையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இதற்கிடையே சிறுத்தை நடமாட்டம் குறித்து தகவல் அப்பகுதியிலும், சமூக வலைதளத்திலும் வேகமாக பரவியது. மேலும், ஜாகீர் வெங்கடாபுரம் அரசு உயர்நிலைப்பள்ளியில் படிக்க கூடிய மாணவ, மாணவிகள் பள்ளி நேரத்தில் வகுப்பறைவிட்டு வெளியே செல்வதற்கு ஆசிரியர்கள் தடை விதித்துள்ளனர். காலை, மாலையில் மாணவ, மாணவிகள் பாதுகாப்பாக சென்றுவர ஏதுவாக உரிய நடவடிக்கைகளை பள்ளியின் ஆசிரியர்கள் மேற்கொண்டுள்ளனர். இதுகுறித்து அப்பகுதி மக்கள் கூறும்போது, கடந்த சில ஆண்டுகளாக நவம்பர், டிசம்பர் மாதங்களில் இப்பகுதியில் சிறுத்தை நடமாட்டம் உள்ளது. எனவே, வனத்துறையினர் கண்காணிப்பை தீவிரப்படுத்திட வேண்டும். மேலும் கூண்டு வைத்து சிறுத்தையை பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கொட்டும் மழையில் பக்தர்கள் சுவாமி தரிசனம்

திருச்செந்தூர், டிச.14

வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது.

திருச்செந்தூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளான காயாமொழி, பரமன்குறிச்சி, தளவாய்புரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இன்று காலை 6 மணி முதல் மழை பெய்தது.

இதனால் இன்று காலை



தி ரு ச் செ ந் தூ ர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு சுவாமி தரிசனம் செய்ய வந்த பக்தர்கள் கடும் அவதி அடைந்தனர்.

கோவில் நடை இன்று அதிகாலை 4 மணிக்கு திறக்கப்பட்டது. அதிகாலை 4.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனையும், 6 மணிக்கு உதயமார்த்தாண்ட அபிஷேகம் நடைபெற்றது.

தமிழகத்தின் பல்வேறு பகுதியில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அதிகாலை முதல் கோவிலில் குவிந்தனர். அவர்கள் மழையை பொருட்படுத்தாமல் கடலில் புனித நீராடினர். பின்னர் மழையில் நனைந்தபடியே நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

# சட்டவிரோதமாக இலங்கைக்கு படகில் செல்ல முயன்ற 4 பேர் கைது



ராமநாதபுரம், டிச.14

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாககடந்தஇரண்டு ஆண்டுகளாக தனுஷ்கோடிக்கு அகதிகளாக வந்த 310க்கும் மேற்பட்ட இலங்கை தமிழர்கள் மண்டபம் முகாமில் தற்காலிகமாக தமிழக அரசால் தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

இந்நிலையில் நள்ளிரவு வேளையில், தங்கச்சிமடம் தண்ணீர் ஊற்று கடற்பகுதியில் போலீசார் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கையில் பயணம் செய்வதற்கான பைகளுடன் நின்று கொண்டிருந்த 4 இலங்கை தமிழர்களை தங்கச்சிமடம் போலீஸ் நிலையம் அழைத்து வந்து விசாரணை நடத்தினர்.

அப்போது அவர்கள் 4 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் வசித்து வந்த சசிகுமார் (வயது 28), கோகிலவாணி (44), வேலூர் அகதி முகாமைச் சேர்ந்த சேகர்என்ற ராஜ்மோகன் (39), சிதம்பரம் அகதி முகாமைச் சேர்ந்த நாகராஜ் (68) என்பதும், சட்ட விரோதமாக படகு மூலம் இலங்கை செல்ல முற்பட்டதும் முதற் கட்ட விசாரணையில் தெரியவந்தது.

இதையடுத்து முறையான பாஸ்போர்ட் இன்றி சட்ட விரோதமாக கடல் வழியாக தப்பிச் செல்ல முயன்றதாக வழக்குப் பதிவு செய்த தங்கச்சிமடம் போலீசார் அந்த 4 பேரையும் கைது செய்தனர். பின்னர் அவர்கள் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அதேபோல் அவர்கள் படகில் தப்பிச் செல்ல உதவி செய்தவர்கள் யார், எவ்வளவு பணம் வாங்கினார்கள் என்றும் தங்கச்சிமடம் போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# நவீன தொழிற்சாலை ரெயில் பயணிகளுக்கு தினமும் 40 ஆயிரம் போர்வைகள் சலவை செய்து தயாராகிறது

சென்னை, டிச.14

ரெயில் பயணம் மகிழ்ச்சியாகவும் பாதுகாப்பாகவும் இருப்பதால் பயணிப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தெற்கு ரெயில்வே மூலம் இயக்கப்படும் ரெயில்களில் ஆண்டுக்கு 6 கோடி பேர் பயணம் செய்கிறார்கள். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு மட்டுமின்றி வெளி மாநிலங்களுக்கும் சென்று வருகின்றன.



ரெயிலில் குளிர்சாதன பெட்டியில் பயணம் செய்யும் பயணிகளுக்கு தலையணை, படுக்கை விரிப்பு, போர்வை, கம்பளி, துண்டு ஆகியவை வழங்கப்படுகிறது. அனைத்து ரெயில்களுக்கும் இவை எவ்வாறு கொண்டு செல்லப்படுகின்றன.

அதனை தூய்மை படுத்தும் பணி எப்படி மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு ரெயிலுக்கும் குறித்த நேரத்துக்கு முன்பாக கொண்டு செல்லுதல், அதே போல பயன்படுத்தப்பட்ட அழுக்கு போர்வை, படுக்கை விரிப்புகளை எடுத்து பாதுகாப்பாக கொண்டு சென்று மீண்டும் சலவை செய்து வழங்குவதற்கான வேலைகள் ஒரு பெரிய தொழில்நுட்ப வளையத்திற்குள் நடைபெறுவது மிகுந்த ஆச்சர்யத்தை ஏற்படுத்துகிறது.

பல்வேறு இடங்களில் சென்னைக்கு வரும் ரெயில்களும், இங்கிருந்து பிற மாநிலங்களுக்கு செல்லும் ரெயில்களிலும் பயணிகள் பெட்டிக்கு வருவதற்கே முன்பே படுக்கை விரிப்புகள் கவர் போடப்பட்டு வைக்கப்படும்.

போர்வை, படுக்கை விரிப்பு போன்றவற்றை தூய்மை செய்வதற்காக சென்னை பேசின் பாலம் அருகில் நவீன தொழில்நுட்பத்திலான மிகப்பெரிய சலவை செய்யும் தொழிற்சாலை உள்ளது. இதில் தினமும் 21 டன் துணிகள் சலவை செய்யப்படுகின்றன. ஒரு ஷிப்டுக்கு 7 டன் வீதம் 3 ஷிப்டு என 24 மணி நேரமும் இந்த சலவை தொழிற்சாலை இயங்கி கொண்டு இருக்கிறது. தினமும் 42 எக்ஸ்பிரஸ் ரெயில்களுக்கு இங்கிருந்து போர்வை, கம்பளி உள்ளிட்டவை சுகாதாரமான முறையில் சுத்தம் செய்யப்பட்டு ரெயில்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது.

இந்த பணிகள் அனைத்தும் முறையாக திட்டமிடப்பட்டு குறித்த நேரத்திற்குள் நீராவி மூலம் சுத்தம் செய்து தானியங்கி கருவி சலவை செய்வதுடன் தானாகவே மடித்தும் வெளியே வந்து விடும். அதனை ஊழியர்கள் கவரில் அடைத்து ஒவ்வொரு ரெயில் பெட்டிக்கும் கொண்டு செல்லப்படுகின்றன. இந்த நவீன சலவையகம் 20 ஆயிரம் சதுர அடியில் செயல்படுகிறது. 40 ஆயிரம் போர்வைகள் 20 ஆயிரம் துண்டு, 20 ஆயிரம் தலையணை கவர், 700 கம்பளி ஆகியவை தினமும் தூ ய் மை ம ப் ப டு த் தப்படுகிறது.


நாகர்கோவில், எர்ணாகுளம் ஆகிய இடங்களில் குறைந்த கொள்ளளவு சலவையகம் செயல்பட்டு வருகிறது. விரைவில் மதுரை, கோவை மற்றும் மங்களூரில் 7800 செட் போர்வை தூய்மைப்படுத்தும் மையம் நிறுவப்பட உள்ளது.

தெற்கு ரெயில்வே மூலம் இயக்கப்படும் அனைத்து ரெயில்களிலும் சுத்தமான சுகாதாரமான போர்வை, கம்பளி, படுக்கை விரிப்புகள் வழங்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

எங்கோ பயணத்தை தொடங்கும் இடத்தில் இருந்து அது முடியும் இடம் வரை பயணிகளுகூகு வழங்கப்படும் போர்வை கம்பளியின் தூய்மை பணியில் நூற்றுக்கணக்கான ஊழியர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். இரவுபகலாக நடைபெற்று வரும் இந்த பணியின் மூலம் ஒவ்வொரு ரெயில் பயணிகளுக்கும் சொகுசான மற்றும் சுகாதாரமான பயணத்தை கொடுக்கும் வகையில் இந்த பணி அமைந்துள்ளது.

சென்னை சென்ட்ரல் மற்றும் எழும்பூரில் இருந்து இயக்கப்படும் எக்ஸ்பிரஸ் ரெயில்களில் ஏ.சி. முதல் வகுப்பு, இரண்டாம் மற்றும் 3ம் வகுப்பு பயணிகள் வெண்மையான போர்வை, துண்டு ஆகியவற்றை பயன்படுத்தும் வகையில் இந்த சேவை அமைந்துள்ளது. இந்த பணியை தனியார்நிறுவன "பூட் அடிப்படையில் செய்ய தெற்கு ரெயில்வே அனுமதி அளித்துள்ளது.

ரெயில்வே வழங்கும் இந்த சேவைக்கு ஏ.சி. டிக்கெட்டுடன் அதற்கான கட்டணம் சேர்த்து வசூலிக்கப்படுகிறது. எனவே பயணிகளுக்கு தரப்படும் போர்வை, துண்டு, படுக்கை விரிப்பு தூய்மையாக இல்லையென்றால் புகார் தெரிவிக்கலாம். அதன் மீது உரிய நடவடிக்கையும் ரெயில்வே எடுத்து வருகிறது. தூய்மை, சுகாதாரம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து வரும் ரெயில்வே இந்த பணியை தீவிரமாக கண்காணித்தும் வருகிறது.



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம் வேம்பி மதுரா பூரி குடிசையில் மாரியம்மன் கோவில் கருவறையில் இருந்து ஊர் பொதுமக்கள் சார்பாக அதே பகுதியில் மயிலம் மேடு என அழைக்கப்படும் திருவண்ணாமலையருக்கு மேளதாளத்துடன் தீபம் ஏற்றுவதற்கு கொப்பரை எடுத்து செல்லப்பட்டு இரவு 6:00மணிஅளவில் தி மு க விக்கிரவாண்டி மேற்கு ஒன்றிய செயலாளர் வேம்பி J.ரவி மகாதீபத்தைஏற்றிவைத்தார்உடன்ஊராட்சிமன்றதலைவர் தனலட்சுமி கிராம அலுவலர் வாசுதேவன் ஊர் முக்கியஸ்தர்கள் வாலிபப் பிள்ளைகள் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கி மகிழ்ச்சியாக கொண்டாடினார்கள்

# கிருஷ்ணகிரியில் தனியார் பள்ளி பஸ் மோதி வாலிபர் பலி

சூளகிரி, டிச.14

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி அருகே பீர்பள்ளி சாமல் பள்ளம் நெடுஞ்சாலையில் தனியார் பள்ளி பஸ் சென்று கொண்டு இருந்தது.

ம ல் ல சந் தி ர த் தி ல் சேர்ந்த முருகன் மகன் சதீஷ் (வயது 25) என்பவர் கூலி வேலைக்காக சாமல் பள்ளத்தை நோக்கி தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டு இருந்தார். அப்போது தனியார் பள்ளி பஸ் மல்லசந்திர பகுதிக்கு வந்தபோது திடீரென்று சதீஷ் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து க்குள்ளானது. இதில் அவர் சம்பவ இடத்திலே பரிதாபமாக உயிரிழந்தார்.

இதையறிந்த சதீஷின் தாய், தந்தை மற்றும் உறவினர் 100 மேற்பட்டவர்கள் ப ஸ் டி ச முற்றுகையிட்டனர்.

இந்த சம்பவம் குறித்து தகவலறிந்த சூளகிரி போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து சதீஷின் உறவினர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். அதன் பின்னர் அவர்கள் கலைந்து சென்றனர்.

இந்த சம்பவம் குறித்து போலீசார்சதீஷின்உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக சூளகிரி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். சம்பவம் குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து தனியார் பள்ளி பஸ்சின் டிரைவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் விபத்தில் உயிரிழந்த சதீஷின் கு டு ம் ப த் தி ன ரி டை யே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# வெள்ள நிவாரணம் கேட்டு பொதுமக்கள் மறியல் போக்குவரத்து கடும் பாதிப்பு

திண்டிவனம், டிச.14

கடந்த 30ந் தேதி ஃபெஞ்ஜல் புயல் கரையை கடந்த போது விழுப்புரம் மாவட்டத்தில் வரலாறு காணாத மழை பொழிவை சந்திக்க நேரிட்டது.

விழுப்புரம் மாவட்டத்தையே புரட்டி போடும் அளவிற்கு கொட்டி தீர்த்த அதிகன மழையின் காரணமாக பல்வேறு இடங்களிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு ஆயிரக்கணக்கான வீடுகளும், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களும் பாதிக்கப்பட்டது. இந்நிலையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளில் வசித்து வரும் குடும்ப அட்டைத்தாரர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதியுதவி வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்திருந்தது. அதன்படி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு டோக்கன் வழக்கப்பட்டு 2 ஆயிரம்



ரூபாய் நிவாரண நிதி வழங்கப்பட்டுவருகிறது. இதில் வெள்ளத்தால் பாதிக்கப்படாத இடங்களில் உள்ள வீடுகளுக்கு 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது, அதே சமயம் வெள்ளதால் பாதிக்கப்பட்ட வீடுகளில் வசித்து வரும் மக்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதி வழங்கப்படுவதில்லை என குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் நடைபெற்று வரும் இந்த குளறுபடிகள் காரணமாக, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நிவாரண நிதி கிடைக்காத பொது மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

திண்டிவனம் அருகே உள்ள மேல்பேரடிக்குப்ப கிராம மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் நிவாரணம் மற்றும் மழையால் பாதிக்கப்பட்ட விவசாய இடங்களுக்கு நிவாரண வழங்க கோரியும், நிவாரண வழங்காததை கண்டித்தும் ஆத்திரமடைந்த அந்த பகுதிகளைச் சேர்ந்த பெண்கள் உட்பட 200க்கும் மேற்பட்டோர் திருவண்ணாமலைதிண்டிவனம் சாலையில் திடீரென சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் மேல் பேரடிக்குப்பம் குளம் நிரம்பி ஊருக்குள் தண்ணீர் புகுவதாகவும் குடி நீர் கலங்கலாக வருவதாகவும் குற்றம் சாட்டினர். திருவண்ணாமலை செல்லும் சாலையில் மக்கள் மறியலில் ஈடுபட்டு வருவதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சாலை மறியலில் ஈடுபட்ட பொதுமக்களிடம் திண்டிவனம் தாசில்தார் சிவா, டி.எஸ்.பி. பிரகாஷ் ஆகியோர் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். மேலும் வீடு, வீடாக சென்று குடிநீர் கலங்கலாக வருகிறதா என ஆய்வு செய்தனர். இந்த மறியல் காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# ஓசூர் அருகே அட்டகாசம் செய்து வரும் 32 யானைகள் விரட்டும் பணியில் வனத்துறையினர் தீவிரம்

தளி, டிச.14

கர்நாடக மாநிலம் பன்னார்கட்டா வனப்பகுதியில் இருந்து கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வனக்கோட்டத்திற்குள் நூற்றுக்கும் மேற்பட்ட யானைகள் வந்துள்ளன. இவை பல குழுக்களாக பிரிந்து அட்டகாசம் செய்து வருகின்றன.

இந்த நிலையில், தேன்கனிக்கோட்டை வனப்பகுதியில் இருந்து ராயக்கோட்டை வழியாக ஓசூர் சானமாவு காட்டிற்கு 32 யானைகள் வந்தன. இந்த யானைகளை அடர்ந்த வனப்பகுதிக்குள் விரட்டும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டனர்.

அப்போது யானைகள் 2 குழுக்களாக பிரிந்தன. 11 யானைகள் போடிச்சிப்பள்ளி வழியாக காடு உத்தனப்பள்ளி, ஒன்னுகுறுக்கி, கோட்டட்டி வழியாக தேன்கனிக் கோட்டை அருகே உள்ள பேவநத்தம் காட்டிற்கு நேற்று அதிகாலை 4 மணி அளவில் சென்றன.



அதேபோல 21 யானைகள் தேன்கனிக்கோட்டை வனப்பகுதிக்கு விரட்டும் வழியில் ஒன்னுகுறுக்கி அருகில் மலைப்பகுதி ஒன்றில் நின்றன. அதை விரட்டும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளனர். அந்த யானைகளை ஏற்கனவே சென்றுள்ள 11 யானைகளுடன் சேர்த்து மொத்தம் உள்ள 32 யானைகளையும் அடர்ந்த வனப்பகுதிக்குள் விரட்டிட வனத்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

இதற்கிடையே சூளகிரி தாலுகா ஏ.செட்டிப்பள்ளி வனப்பகுதியில் ஒற்றை யானை ஒன்று சுற்றி திரிந்தது. இதனால் அந்த பகுதி மக்கள் அச்சத்தில் இருந்தனர். அந்த யானையை அடர்ந்த வனப்பகுதிக்குள் விரட்டிட வனத்துறையினர் நடவடிக்கை எடுத்தனர்.

தற்போது அந்த யானையை சின்னக்குத்தி வனப்பகுதிக்கு விரட்டி உள்ளனர். இதனால் சின்னக்குத்தி, பெரியகுத்தி, கும்பளம், ராமன்தொட்டி, உள்ளிட்ட பகுதி மக்கள் கவனமாக இருக்க வேண்டும் என்று வனத்துறையினர் அறிவுறுத்தி உள்ளனர்.

# மதுரை மாநகராட்சி கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர் அலுவலகம்: மேயர் திறந்து வைத்தார்



மதுரை, டிச.14

மதுரை மாநகராட்சி வார்டு எண்.97 திருப்பரங்குன்றம் பெரியரத வீதி பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடம் மற்றும் திருவள்ளுவர் மகால் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, கிருஷ்ணாபுரம் காலனி மாநகராட்சி நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை மேயர் இந்திராணி பொன்வசந்த் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

மதுரை மாநகராட்சி மண்டலம் 5 வார்டு எண்.97 திருப்பரங்குன்றம் பெரியரத வீதி கோட்டை தெரு எதிர்புரம் ரூ.7 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடம், மண்டலம் 4 வார்டு எண்.47 திருவள்ளுவர் மகால் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளியில் (2023-24) திட்டத்தின் கீழ் ரூ.49 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள மூன்று கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை திறந்து வைத்து மாணவர்களுடன் கல்வி கற்றல் குறித்து மேயர் கலந்துரையாடினார்கள். மண்டலம் 1 வார்டு எண்.16 கிருஷ்ணாபுரம் காலனி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை மேயர் திறந்து வைத்தார்கள்.

தொடர்ந்து மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண்.31 கரும்பாலை மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டுவதற்கான பூமி பூஜை மேயர் தலைமையில் நடைபெற்றது. அப்பள்ளியில் சத்துணவு கூடத்தில் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார். பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவுகளை தரமாகவும், சுவையாகவும் வழங்குமாறு மேயர் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன், துணை மேயர் தி.நாகராஜன், மண்டலத் தலைவர்கள் சுவிதா, முகேஷ்சர்மா, சரவண புவனேஸ்வரி, கல்விக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன், உதவி ஆணையாளர்கள் இராதா, சாந்தி, பார்த்தசாரதி, கோபு, கல்வி அலுவலர் ரகுபதி, மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன், உதவி செயற் பொறியாளர்கள் முத்து, மயிலேறிநாதன், சுகாதார அலுவலர்கள் சிவசுப்பிரமணியன், திருமால், பிச்சை, உதவிப் பொறியாளர்கள் மணியன், பொன்மணி, மாமன்ற உறுப்பினர்கள் சிவசக்தி, இந்திரா காந்தி, பானு, ஜெயராஜ், முருகன், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நில அளவை குறித்த மனுக்கள் மீது உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் அலுவலர்களுக்கு நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் உத்தரவு

நாமக்கல், டிச.14

நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் ப.மதுசூதன ரெட்டி, நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட கலெகர் ச.உமா, தலைமையில் நில அளவை பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை இயக்குநர் ப.மதுசூதன் ரெட்டி, தெரிவித்தாவது:

தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தி உள்ள இணையவழி மூலம் விரைவு பட்டா மாறுதல் பொதுமக்கள் பயனடையும் வகையில் பட்டா மாறுதல் மனுக்கள் மீதும் உரியகாலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். புல எல்லை மனுக்களை உரிய காலத்திற்குள் முடிக்க வேண்டும். பத்திரபதிவு அலுவலகம் மூலம் வரப்பெறும் மனுக்கள் உரிய காலத்தில் வரப்பெறுகிறதா என்றும், அவ்வாறு வரும் மனுக்கள் மீது நில அளவர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும். மனை பிரிவுகளாக பிரிக்கப்பட்டு வரப்பெறும் மனுக்களை அரசுக்கு சொந்தமான வீதிகள், பூங்காக்கள் மற்ற இதர நிலங்களை பிரித்து மீதம் உள்ள வீட்டுமனைகளை விரைந்து அளவீடு செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும். பொது சேவை மையம் மூலம் மனுக்கள் உள்ளீடு செய்யும் போது எவ்வித தவறுகளின்றி சரியான புல எண்கள், பத்திர ஆவண எண்களின் விபரங்களை உள்ளீடு செய்யவேண்டும். மேலும், அரசு நடைமுறைபடுத்தப்பட்ட என்ற முறையில் உட்பிரிவு மனுக்கள் மற்றும் பட்டா மாறுதல் மனுக்ளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். மனுக்களை உரிய காரணம் இல்லாமல் தள்ளுபடி செய்யகூடாது என நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை இயக்குநர் ப.மதுசூதன் ரெட்டி, தெரிவித்தார்.



இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், வருவாய் கோட்டாட்சியர்கள் ஆர்.பார்தீபன் (நாமக்கல்), சே.சுகந்தி (திருச்செங்கோடு), உதவி இயக்குநர் (நில அளவை) இரா. ஜெயசந்திரன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ராஜக்காபட்டியில் லாட்டரி வியாபாரி கைது

திண்டுக்கல், டிச. 13

திண்டுக்கல் நத்தம் தொகுதி ராஜக்காபட்டியில் லாட்டரி வியாபாரி போலீசாரால் கைது செய்யப்பட்டார். திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப் ஆலோசனையின்படி புறநகர் போலீஸ் துணை சூப்பிரண்டு சிபி சாய் சௌந்தர்யன் மேற்பார்வையில், நத்தம் போலீஸ் இன்ஸ்பெக்டர் தங்கமுனியசாமி தலைமையில் சாணார்பட்டி போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன், சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் முருகேசன் மற்றும் போலீசார் ராஜக்காபட்டி பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்த ஒருவரை மடக்கி பிடித்து விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர் ராஜக்காபட்டி திடீர்நகரை சேர்ந்த கருப்பணன் (வயது 75) என்பதும், விற்பனைக்காக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகள் வைத்திருந்ததும் தெரிய வந்தது. இதையடுத்து அவரை போலீசார் கைது செய்தனர். மேலும் அவரிடம் இருந்து கேரளா லாட்டரி சீட்டுகள் பறிமுதல் செய்து சாணார்பட்டி காவல் நிலைய போலீசார் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.



# நயன்தாராவுக்கு எதிராக தனுஷ் வழக்கு ஜன.8ல் விசாரணை



நடிகை நயன்தாராவின் சிறுவயது வாழ்க்கை முதல் முன்னணி கதாநாயகியாக உயர்ந்தது வரை உள்ள சம்பவங்களை தொகுத்து 'நயன்தாரா: பியாண்ட் தி பேரி டேல்' என்ற ஆவணப்படம் கடந்த மாதம் நெட்பிளிக்ஸில் வெளியானது. இதற்கு முன்பு வெளியான அந்த ஆவணப்படத்தின் டிரெய்லரில், தனுஷ் தயாரிப்பில் 'நானும் ரவுடிதான்' திரைப்படத்தின் சிறு காட்சி இடம்பெற்றிருந்தது.

அந்த காட்சியை உரிய அனுமதியின்றி அதில் பயன்படுத்தியதாக நயன்தாராவிடம் ரூ.10 கோடி இழப்பீடு கேட்டு தனுஷ் வழக்கறிஞர் மூலம்நோட்டீஸ்அனுப்பிஇருந்தார்.அதன்பின்னர்,நயன்தாராவுக்கு எதிராக, தனுஷின் வொண்டர் பார்ஸ் நிறுவனம் சார்பாக சென்னை ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த நீதிபதி, வழக்கை தாக்கல் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட்டிருந்தது.

இதையடுத்து, அனுமதியின்றி காட்சிகளை பயன்படுத்தியதற்காக ரூ.10 கோடி இழப்பீடு வழங்கவும், காட்சிகளை பயன்படுத்த தடை கோரியும் வொண்டர்பார் நிறுவனம் தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, வழக்கு தொடர்பாக பதிலளிக்கும்படி, நயன்தாரா மற்றும் விக்னேஷ் சிவன், நெட்பிளிக்ஸ் நிறுவனத்துக்கு உத்தரவிட்டார். இந்த பதில் மனுக்களுக்கு, தனுஷ் தரப்பிலும் பதில் அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்ட நீதிபதி, வழக்கில் இடைக்கால தடை கோரும் மனு மீது ஜனவரி 8ம் தேதி இறுதி விசாரணை நடத்தப்படும் என அறிவித்துள்ளார்.

# பா. ரஞ்சித்தின் 'வேட்டுவம்' படத்தில் நடிக்கும் பகத் பாசில்



தமிழ் சினிமாவின் முனனணி இயக்குனர்களில் ஒருவர் பா.ரஞ்சித். இவர் இயக்கிய 'அட்டகத்தி, கபாலி, காலா, சார்பட்டா பரம்பரை' ஆகிய திரைப்படங்கள் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றன. சமீபத்தில் வெளியான தங்கலான் திரைப்படம் ரசிகர்களிடையே கலவையான விமர்சனங்களைப் பெற்றது.

இந்த நிலையில் இயக்குனர் பா.இரஞ்சித் தற்போது 'வேட்டுவம்' என்ற புதியபடத்தைஎழுதிஇயக்கவுள்ளார்.இப்படத்தைகோல்டன்ரேஷியோ பிலிம்ஸ் நிறுவனத்துடன் இணைந்து நீலம் ஸ்டுடியோஸ் நிறுவனம் தயாரிக்கிறது. மேலும் இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் உலக புகழ் பெற்ற கேன்ஸ் சர்வதேச திரைப்பட விழாவில் வெளியிடப்பட்டது. இந்த திரைப்படத்தில் அட்டகத்தி தினேஷ் கதாநாயகனாக நடிக்க உள்ளார். நடிகர் ஆர்யா வில்லனாகவும், அசோக் செல்வன் முக்கிய கதாபாத்திரத்திலும் நடிக்க உள்ளனர்.

இந்த படத்தின் படப்பிடிப்பு பணிகள் விரைவில் தொடங்க உள்ளன. இந்த நிலையில் தற்போது இப்படத்தில் நடிகர் பகத் பாசில் இணைந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அதில் முக்கியமான ஒரு கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது. விரைவில் இப்படம் தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மனைவியை பிரிவதாக இயக்குநர் சீனு ராமசாமி அறிவிப்பு



தமிழ் சினிமாவில் முன்னணி இயக்குநராக இருப்பவர் சீனு ராமசாமி. இவரது கதைக்களம் மற்றும் கதாபாத்திரங்களின் மூலம் ரசிகர்களிடையே தனக்கென ஒரு தனி இடத்தை பிடித்துள்ளார். இவர் இயக்கிய தென்மேற்கு பருவக்காற்று, நீர்ப்பறவை, தர்மதுரை, மாமனிதன் போன்ற படங்கள் இன்றளவும் பேசப்படும் படங்களாக உள்ளன.

இந்தநிலையில், மனைவியைப்பிரிவதாக இயக்குநர் சீனு ராமசாமி அறிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில் கூறியிருப்பதாவது:

அன்பானவர்களுக்கு வணக்கம் நானும் எனது மனைவி ஜி.எஸ். தர்ஷனாவும் எங்கள் 17 வருட திருமண வாழ்வில் இருந்து விடைபெறுகிறோம். இருவரும்விருப்பவிவாகரத்துபெற்றுஅவர்அவருக்கு உண்டான திசையில் பயணிக்கவும் அந்த பாதையில் தர்ஷனாவின் செயல்பாடுகள் என்னையும் எனது செயல்பாடுகள் அவரையும் எவ்விதத்திலும் சேராது, பொறுப்பாகாது என்பதை நான் அறிவேன். அவரும் அறிவார். இப்பிரிவுக்கு உதவும் படி சென்னை ஐகோர்ட்டை நாடியுள்ளோம். இருவரின் தனிப்பட்ட இந்த முடிவுக்கும் அதன் உரிமைக்கு மதிப்பளிக்கும் தங்களின் வாழ்த்துக்கள் எங்களுக்கு ஊக்கம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஸ்டார்க்கை ஜெய்ஸ்வால் தேவையின்றி தட்டி எழுப்பிவிட்டார் பாண்டிங் கருத்து



ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள்கொண்ட பார்டர் கவாஸ்கர் கோப்பை டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் 2 போட்டிகள் முடிவடைந்த நிலையில் தொடர் 11 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3வது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் உள்ள காபா மைதானத்தில் வரும் 14ம் தேதி தொடங்குகிறது. முன்னதாக அந்தத் தொடரின் முதல் போட்டியில் இளம் இந்திய வீரர் ஜெய்ஸ்வால் 161 ரன்கள் குவித்து வெற்றியில் முக்கிய பங்காற்றினார். அந்தப் போட்டியில் ஆஸ்திரேலியாவின் அனுபவ வீரர் மிட்செல் ஸ்டார்க்கை, 'நீங்கள் மிகவும் மெதுவாக பந்து வீசுகிறீர்கள்' என்று ஜெய்ஸ்வால் சீண்டினார். இதனையடுத்து நடைபெற்ற 2வது போட்டியின் முதல் பந்திலேயே ஜெய்ஸ்வாலை கோல்டன் டக் அவுட்டாக்கிய ஸ்டார்க் தக்க பதிலடி கொடுத்தார். மேலும் 8 விக்கெட்டுகள் எடுத்த அவர் இந்தியாவை தோற்கடித்து ஆஸ்திரேலியாவின் வெற்றியில் முக்கிய பங்காற்றினார்.

இந்நிலையில் முதல் போட்டியிலேயே ஸ்டார்க் உள்ளே இருந்த நெருப்பை ஜெய்ஸ்வால் தேவையின்றி தட்டி எழுப்பியதாக ரிக்கி பாண்டிங் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "மிட்செல் ஸ்டார்க் பொதுவாக சமநிலையுடன் இருக்கக்கூடியவர். அவர் அதிகம் கோபப்பட மாட்டார் என்பதை இப்போதும் நீங்கள் பார்க்கிறீர்கள். அப்படிப்பட்ட அவர் ஏதேனும் ஒரு பேட்ஸ்மேன் தன்னிடம் ஏதாவது சொன்னால் தனது முகத்தில் லேசான சிரிப்பால் மட்டுமே பதிலை கொடுப்பார்.

ஆனால் அந்த சிரிப்பின் பின்புறத்தில் அவருக்குள் நெருப்பு எரியும் என்று நினைக்கிறேன். அதன் காரணமாக 2வது போட்டியில் அவர் அபாரமாக பந்து வீசினார் என்று பாருங்கள். கடந்த சில வருடங்களாக இருந்ததை விட அந்தப் போட்டியில் மிகவும் அற்புதமாக பந்து வீசிய அவர் அதிகமான பாராட்டுக்குரியவர்.

தற்போது அவரால் மீண்டும் தன்னுடைய கெரியரின் உச்சத்தைப் போல 150 கி.மீ வேகத்தில் வீச முடியும். பெரும்பாலும் அவர் 140 கி.மீ வேகத்திற்கு மேல் தொடர்ச்சியாக பந்து வீசுவது என்னைக் கவர்ந்துள்ளது. குறிப்பாக இளஞ்சிவப்பு நிற பந்தில் அவர் இன்னும் அபாரமாக செயல்படுகிறார். எனவே அவருடைய வேகம் எந்த வகையிலும் குறையவில்லை. அதனால் ஸ்டார்க், கமின்ஸ், ஹேசல்வுட் ஆகியோர் இன்னும் சில வருடங்கள் ஆஸ்திரேலிய அணிக்காக தொடர்ந்து விளையாட வாய்ப்புள்ளது" என்று கூறினார்.

# மகளிர் கிரிக்கெட்: முதல் வீராங்கனையாக உலக சாதனை படைத்த மந்தனா



இந்தியாமகளிர்கிரிக்கெட்அணிஆஸ்திரேலியாவில்சுற்றுப்பயணம்மேற்கொண்டு 3போட்டிகள்கொண்டஒருநாள்தொடரில்விளையாடியது. இதில்3போட்டிகளிலும் தோல்வியடைந்த இந்திய அணி ஒயிட்வாஷ் ஆனது.

இந்த தொடரின் 3வது மற்றும் கடைசி போட்டி நேற்று நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர் பீல்டிங்கை தேர்வு செய்தார். இதையடுத்து முதலில் பேட் செய்த ஆஸ்திரேலிய அணி 50 ஓவர் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 298 ரன்கள் சேர்த்தது. அதிகபட்சமாக சுதர்லேண்ட் 110 ரன்கள் குவித்தார். இந்திய தரப்பில் அருந்ததி ரெட்டி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் 299 ரன் இலக்கை நோக்கி ஆடிய இந்திய அணி 45.1 ஓவர்களில் 215 ரன்களில் ஆல்அவுட் ஆனது. இதனால் ஆஸ்திரேலியா 83 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக மந்தனா சதம் அடித்து அசத்தினார். ஆஸ்திரேலிய தரப்பில் ஆஷ்லி கார்ட்னௌர் 5 விக்கெட்டுகளும், மேகன் ஸ்கட், அலனா கிங் தலா 2 விக்கெட்டுகளும், சுதர்லேண்ட் ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். ஆட்டநாயகி மற்றும் தொடர்நாயகி விருதை சுதர்லேண்ட் தட்டிச் சென்றார்.

இந்திய அணியின் முன்னணி வீராங்கனையான மந்தனா இந்த வருடம் மட்டும் ஒருநாள் கிரிக்கெட்டில் 4 சதங்கள் அடித்துள்ளார். இதன் மூலம் மகளிர் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு ஆண்டில் 4 சதங்கள் அடித்த முதல் வீராங்கனை என்ற மாபெரும் உலக சாதனையை அவர் படைத்துள்ளார். மந்தனா இந்த வருடம் தென்ஆப்பிரிக்காவுக்கு எதிராக 2, நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக தலா 1 என மொத்தம் 4 சதங்கள் அடித்துள்ளார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.